**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 148/2024**

**PW. 1**

**Date: 23.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. விஜயகீர்த்தி | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | ஜெயகுமார் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

**1.** நான் என்னுடைய குடும்பத்துடன் படூரில் வசித்து வருகிறேன். நான் பொறியியல் பட்டதாரி. பத்து ஆண்டுகள் பொறியியல் சம்பந்தமாக பணிகளை பார்த்து வந்தேன். கடந்த 2023 ஆம் ஆண்டு தொழில் தொடங்கலாம் என முடிவு செய்து 2023 ஏப்ரல் மாதத்தில் ஏகாட்டூரில் நான் தொழில் ஆரம்பிப்பதற்கான இடம் உள்ளதாக 1 ஆம் எதிரி என்னை அணுகினார். ஒரு வணிக வளாகத்தில் முதல் தளத்தில் 1200 சதுரடி 1 ஆம் எதிரி காண்பித்தார். அந்த இடத்திற்கு அவர்தான் உரிமையாளர் என்றும் என்னிடம் சொன்னார். அதற்கான ஆவணங்களையும் என்னிடம் காண்பித்தார். அந்த இடத்திற்கு அவரது மனைவி 2 ஆம் எதிரி பெயரில் பொது அதிகார ஆவணம்

உள்ளதையும் என்னிடம் காண்பித்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பொது அதிகார ஆவணம் 2 ஆம் எதிரியின் பெயரில்உள்ளது தான். (**01/10/2015 தேதியிட்ட பொது அதிகார ஆவண நகல் பு.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2. அவர் ஆவணங்களை காண்பித்த பிறகு மாத வாடகை ரூ.30,000/- என்றும் முன்பணம்ரூ. 5,00,000/- என்றும் பேசப்பட்டது. அவ்வாறு வாடகை உடன்படிக்கையும் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் வாடகை உடன்படிக்கை அதுதான். (**தேதியிடப்படாத வாடகை உடன்படிக்கை நகல் பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த உடன்படிக்கை படி நான் முன்பணம் ரூ.5,00,000/- ஐ 21/04/2023 முதல் 05/05/2023 வரை என்னுடைய வங்கி கணக்கின் மூலமாகவும் என்னுடைய மனைவியின் வங்கி கணக்கு மூலமாகவும் 2 ஆம் எதிரியின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பினேன். தற்போதையிடம் காட்டப்படும் வங்கி கணக்கு பட்டியல் என் மனைவி மற்றும் என் பெயரில் உள்ள வங்கிக் கணக்கு பட்டியல் தான் **(புகார்தாரரின் வங்கி கணக்கு பட்டியல் பு.சா.ஆ. 3 ஆகவும் புகார்தாரரின் மனைவி நிஷாந்தினி என்பவரின் வங்கி கணக்கு பட்டியல் பு.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** நான் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பேச்சுத் திறன் உள்ளிட்ட Softskill பயிற்சி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மென்பொருள் பயிற்சி உள்ளிட்டவற்றை கொடுப்பதற்காக தான் அந்த கட்டிடத்தில் நான் வாடகைக்கு சென்றேன். அதற்காக அதன் உட்புற அலங்காரத்திற்காக ரூ.10,00,000/- வரை செலவு செய்தேன். அந்த கட்டிடத்தில் வாடகைக்குச் சென்ற நான்கைந்து மாதத்தில் அந்த கட்டிடம்

நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளதாகவும் எனவே அதனை உடனடியாக காலி செய்ய வேண்டும் என்று அறிவிப்பு வந்தது. நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் எங்கள் அலுவலகத்திற்கு வந்து அந்த விவரத்தை சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆக்கிரமிப்பு அறிவிப்பு நெடுஞ்சாலை துறை 1 ஆம் எதிரிக்கு கொடுத்தது தான். (**05/02/2024 தேதியிட்ட ஆக்கிரமிப்பு அகற்றுதல் அறிவிப்பு நகல் பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

**4.** நான் அது சம்பந்தமாக பேசுவதற்காக 1 ஆம் எதிரியை பலமுறை அணுகிய போதும் அவர் என்னை வந்து சந்திப்பதாக சொன்னார். ஆனால் அவர் வரவே இல்லை. 27/01/2024 அன்று நான் அந்த கட்டிடத்தில் இருந்து காலி செய்து விட்டேன். பலமுறை அவரை தொடர்பு கொண்டு அவர் உரிய பதிலளிக்காததால் நான் 09/03/2024 அன்று கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் 1 ஆம் எதிரியின் மீது புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நகல் நான் கொடுத்தது தான் (**தேதியிடபடாத புகார் நகல் பு.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த புகார் சம்பந்தமாக அவருக்கு காவல் நிலையத்தில் இருந்து இரண்டு மூன்று முறை அழைத்தும் அவர் ஆஜராகவில்லை. எனவே அவருக்கு போலீசார் அழைப்பாணை அனுப்பினார்கள். அதன் பிறகு தான் அவர் காவல் நிலையத்தில் ஆஜரானார்.

5. விசாரணையில் 1 ஆம் எதிரிக்கும் அந்த இடத்தின் உரிமையாளர்கள் என்று சொல்லப்படும் 3 முதல் 7 எதிரிகளுக்கும் அது நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடம் என்பதும் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துதான் அங்கு கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டுள்ளதும் தெரியவந்தது. காவல் நிலையத்தில் 1 ஆம் எதிரி என்னிடம்

பெற்ற பணம் முழுவதையும் திருப்பிக் கொடுத்து விடுவதாக உத்திரவாதம் அளித்தார். அதனை மாத மாதம் திருப்பிக் கொடுப்பதாக சொன்னார். அவர் ஒப்புக்கொண்டபடி மறுநாள் ரூ.25,000/- கொடுத்தார். மூன்று தவணைகளாக மொத்தமாக ரூ. 1,25,000/- கொடுத்தார். ஆனால் அதன் பிறகு அவர் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. மேலும் காலம் தாழ்த்திக் கொண்டே வந்தார். நான் அவரிடம் பணத்தை கேட்ட போது காவல் நிலையத்தில் வைத்து தன்னால் பணம் கொடுக்க முடியாது என்றும் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டார்.

6. எனவே நான் தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்தில் எதிரிகளின் மீது புகார் கொடுத்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நகல் மற்றும் ஒப்புகை சீட்டு நகல் ஆகியவை நான் தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மற்றும் அதற்காக கொடுக்கப்பட்ட ஒப்புகைச் சீட்டு தான் (**17/07/2024 தேதியிட்ட புகார் மற்றும் ஒப்புகை சீட்டு நகல் பு.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்கண்ட புகாரின் மீது போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காததால் நான் எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். எனவே எதிரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து என்னுடைய பணத்தை இழப்பீடாக பெற்று தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d- K. Nilavarasan, 23.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur